குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 152/2020

அ.சா. 1

2024–ம் ஆண்டு ஏப்ரல் 30–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆதிபால் | ஜாதி | |
| தந்தை பெயர் | மாணிக்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.12 மணி,

Accused Muthumanickam present. Advocate Mr.Siddhartha shankar present for Advocate Mr.K.P.Suresh for accused. APP Mr.P.Suresh present.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் எழுதினேனா என்று எனக்கு நினைவில்லை. விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்தேன். எனக்கு இருசக்கரம் வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. மேற்படி வாகன ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்திலோ அல்லது காவல் துறையினரிடமோ கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகம்இல்லை. எதிரியின் அஜாக்கரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் எனக்கு சரிவர வாகனம் ஓட்ட தெரியாமல் நான் வாகனத்தை ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. எனது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து கொண்டு வந்த நபர் பால் வியாபாரம் செய்த பணத்தை எடுப்பதற்காக வங்கிக்கு வந்ததாக நான் கூறியுள்ள நிலையில் அவரது வங்கி கணக்கு புத்தகத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் அது என்னிடம் இல்லை. விபத்து நடந்த இடம் மேச்சேரி பிரவு ரோட்டில் உள்ள பேருந்து நிறுத்தம் என்றால் சரி. எங்கள் மீது மோதிய அரசு பேருந்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்று நான் பார்த்தேனா என்றால் இல்லை.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.04.30 17:18:50 +0530

3. சம்பவ இடம் பேருந்து நிறுத்தம் என்பதால் பயணிகளை ஏற்றி செல்லும் அரசு பேருந்து மெதுவாக தான் நிறுத்தி செல்லும் என்றாலும் நான் தான் எனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து பேருந்தின் பின்புறம் மோதி என்னுடன் வந்தவர் கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் இன்று 06.10.2017 ம் தேதி 12.30 மணிக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரிக்கும் இவ்விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 03.21 மணி,

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.04.30 17:18:55 +0530